

தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (18.10.2024) நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இயற்கை வளங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்(பொ) க.பணீந்திர ரெட்டி, கனிம வளத்துறை ஆணையர் எ.சரவணவேல்ராஜ், மற்றும் கனிம வளத்துறை இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

### நவ. 1 முதல் 50 சதவிகிதத்திலிருந்து 53 சதவிகிதமாக உயர்த்தி வழங்கப்படும்!

# அரசு அலுவலர்கள் - ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, அக்.20-**

**அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 50 சதவீதமாக உள்ள அகவிலைப்படியை 01.07.2024 முதல் 53 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

நாட்டிற்கே வழிகாட்டும் வகையில் பல முன்னோடி நலத்திட்டங்களை மக்கள் நலன் கருதி சிறப்புற நடைமுறைப்படுத்துவதில் பெரும் பங்காற்றும் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனை இந்த அரசு கருத்தில் கொண்டு, அவர்களது நலன் காக்கும் வகையில் பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த வகையில் ஒன்றிய அரசுப் பணியாளர்களுக்கு 01.07.2024 முதல் 50 சதவீதமாக உள்ள அகவிலைப்படி 53 சதவீதமாக அண்மையில் உயர்த்தப்பட்டுள்ள நிலையில் மாநில அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன் பெறும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதனை கனிவுடன் பரிசீலித்து 01.07.2024 முதல் மாநில அரசுப் பணியாளர்களுக்கும் அகவிலைப்படியை உயர்த்தி வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள். இதனால் 50 சதவீதமாக உள்ள அகவிலைப்படி 3 சதவீதம் உயர்ந்து 01.07.2024 முதல் 53 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும்.

இந்த அகவிலைப்படி உயர்வால், சுமார் 16 இலட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள். ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். இதனால் ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு ரூபாய் 1931 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும். எனினும், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதிய தாரர்கள் நலன் கருதி இதற்கான கூடுதல் நிதியை அரசு ஒதுக்கீடு செய்யும்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### அக்.23 அன்று நடைபெறுகிறது!

# தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*தஞ்சை, அக். 20-*

தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் அக்.23 அன்று நடைபெறுகிறது.

இக்கூட்டம் குறித்து மாவட்டச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



தஞ்சை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் 23.10.2024 புதன் கிழமை காலை 10.00 மணியளவில் பட்டுக்கோட்டை மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் சுப.சேகர் தலைமையில் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், ச.முரசொலி எம்.பி, மாநில தணிக்கைக்குழு உறுப்பினர் ஏனாதி ப.பால சுப்ரமணியன், நா.அசோக் குமார் எம்.எல்.ஏ, பட்டுக் கோட்டை தொகுதி பார்வை யாளர் சி.குறிஞ்சி வாணன், பேராவூரணி தொகுதி பார்வையாளர் சுப.சரவணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

அதுசமயம் கூட்டத்தில் தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்துக்கொள்ள வேண்டுகிறேன்.

பொருள் :தொகுதிப் பார்வையாளர்கள் அறிமுகம். வாக்காளர் பட்டியல் சரிப்பார்த்தல். அக்.29 முதல் நவ28 வரை பெயர் சேர்த்தல், நீக்குதல்.

OMR படிவம் - குறிப்பேடு. சார்பு அணிகளின் ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள் பட்டியல்.

கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் கா.அண்ணாதுரை, தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமை! அமைச்சர் சி.வெ. கணேசன் முன்னிலை!

# அண்ணா கிராமம் என். பலராமன் இல்லத் திருமண விழா!

## எம்.கே.விஷ்ணு பிரசாந்த் -சபா. இராசேந்திரன்-வி.கே.வெங்கட்ராமன் வாழ்த்துரை!

*கடலூர்,அக்.20-*

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துக்களுடன் கடலூர் மேற்கு மாவட்டம் தலைமை பொதுக்குழு உறுப்பினர் அண்ணா கிராமம் முன்னாள் ஒன்றியக் கழக செயலாளர் முரசொலி முகவர் என். பலராமன் சகோதரர் பண்ருட்டி வட்டம் ஏழுமேடு என். ராமு சுஜாதா ஆகியோரின் மகள் ஆர். சௌமியாவிற்கும் கடலூர் மாவட்டம் விருத்தாசலம் வட்டம் ஜமால் காக் குட்டைகார தெரு ஆர்.பாலு நாகலட்சுமி இவர்களின் மகன் பி. கார்த்திக் ஆகியோருக்கும் திருமணம் கலைஞரின் 101 வது வருடம் ஐப்பசி மாதம் 4ந் தேதி நாளை (21.10.2024- திங்கட்கிழமை) காலை 6 மணிக்கு மேல் 7.30 மணிக்குள் பண்ருட்டி கடலூர் ரோடு சிவபார்வதி மஹாலில் நடைபெறுகிறது.



திருமணத்திற்கு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமை வகிக்கிறார்.

தொழிலாளர் நலம் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் சி.வெ.கணேசன் முன்னிலை வகிக்கிறார்.

கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் எம்.கே.விஷ்ணு பிரசாந்த் கடலூர் கிழக்கு மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே. கல்வி குழுமம் தலைவர் எம். ஆர்.கே.பி. கதிரவன் ஒன்றிய கழக செயலாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் வி. கே. வெங்கட்ராமன் விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சி.வெ.க. வெங்கடேசன் பண்ருட்டி நகர செயலாளர் நகர் மன்ற தலைவர் கே. ராஜேந்திரன் கடலூர் மாநகர செயலாளர் கே. எஸ்.ராஜா நெல்லிக்குப்பம் நகர செயலாளர் மணிவண்ணன் பண்ருட்டி வடக்கு ஒன்றிய செயலாளர் கே. ஆர். செந்தில்குமார் ஆர். ராதா கிருஷ்ணன் ஆர்.சுந்தர வடிவேல் வி. ஜெயமூர்த்தி ஏ.சிவா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

புதுவை மாநில அமைப்பாளர் இரா.சிவா எம்.எல்.ஏ., தமிழக வாழ்வுரிமைக் கட்சி நிறுவனர் தி. வேல் முருகன் எம்.எல்.ஏ.,நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர்.கொ.நந்தகோபாலகிருஷ்ணன் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன் இள. புகழேந்தி முன்னாள் கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.வி.எஸ்.ரமேஷ் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் நெல்லிக்குப்பம் புகழேந்தி துரை.கி. சரவணன் ஜி. தண்டபாணி ராஜவன்னியன் பாவாடை கோவிந்தசாமி சபா. பால முருகன் ஜெயந்தி ராதா கிருஷ்ணன் அரங்க பால கிருஷ்ணன் புகழேந்தி என்.பாரி அறிவழகன், செந் தமிழ் செல்வி கருப்பசாமி எம். எஸ்.கணேஷ் குமார், செல்வ துரைராஜ், எஸ். ராஜேஷ் ஏ. சதாம் தங்க. நாராயணசாமி எஸ்.பாரதி ராஜா பி.பக்கிரி ஜி. சீனிவாசன் இ. மதனகுரு கதிர்காமன் குணா டி. வாசுகி கலியமூர்த்தி ராமச்சந்திரன் சடாச்சரம் வனஜா சுந்தரவடிவேல் காயத்ரி சதாசிவம் அமுதா விஜய சந்திரன் பிரபு குணாளன் மணிகண்டன் ராஜா புஷ்பநாதன் எம்.எஸ். ராம்குமார் கலீலூர் ரகுமான் எழில் செல்வன் செந்தில் குமார் ஆர். கே.ராகவன் எஸ். சாரங்கபாணி ராஜேஷ் முரளி முத்துசாமி வி. சிவனேசன் த. ஏசுதாஸ் டி. ஞானவேலூ ஏ. தமிழன்அருள் ஜெயந்தி

மற்றும் மாவட்ட கழக ஒன்றிய கழக, நகர கழக பேரூர் கழக, கிளைக் கழக செயலாளர்கள் சார்பு அணிகளின் நிர்வாகிகள் தொ.மு.ச. நிர்வாகிகள் பத்திரிக்கை துறையினர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (18.10.2024) திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் திருக்கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு, மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை, எம்.எஸ்.தரணிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, அம்பேத்குமார், பெ.சு.தி.சரவணன், ஓ.ஜோதி, திருவண்ணாமலை மாநகராட்சி மேயர் திருமதி. நிர்மலா கார்த்தி வேல்மாறன், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலாளர் டாக்டர்.தாரேஸ் அகமது, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை துணை செயலாளர் எம். பிரதாப், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் டாக்டர்.இரா.சுகுமார் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.10.2024) திருவண்ணாமலை திருக்கார்த்திகை மகா தீபத் திருவிழாவை முன்னிட்டு, கிரிவல பாதையில் பக்தர்கள் வசதிக்காக சீனிவாசா பள்ளி அருகே தனியார் பங்களிப்புடன் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நவீன சுகாதார வளாக கட்டுமான பணிகளை ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.10.2024) திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் பக்தர்கள் வசதிக்காக நெடுஞ்சாலைத்துறை மூலமாக ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையத்தை திறந்து வைத்தார். மேலும், ரூ.1.2 கோடி மதிப்பீட்டில் புதியதாக 6 சுத்திகரிப்பு நிலைய கட்டுமானப் பணிகளை விரைந்து மேற்கொண்டு தீபத் திருவிழாவிற்குள் பக்தர்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்நிகழ்வில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், ஊனையூர் ஊராட்சி, கே.பள்ளிவாசல் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய மின்மாற்றியினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 18.10.2024 அன்று துவக்கி வைத்தார். உடன் மின்சார வாரிய செயற்பொறியாளர் திருமதி.எம்.ஆனந்தாய், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.